# St Louise Marillac



# March 15

# புனித லூயிஸ் மரிலாக் (1591-1660)

இவள் தனது 18வது வயதில் கப்புச்சின் சபைக் கன்னியராக விரும்பினாள். இவளுடைய ஆன்மகுரு இதை விரும்பவில்லை. பின்னர் இவள் மணமுடித்தாள். கணவரின் சம்மதத்துடன் பாரீஸ் நகர ஏழை மக்களுக்கு உதவி செய்வதில் நேரத்தையெல்லாம் செலவழித்தாள். கணவன் இறந்த பின் துறவியானாள். ஏழை நோயாளிகளைக் கவனிக்கும்படி ஒரு கன்னியர் சபையை நிறுவினாள். ஏழை நோயாளிக்கு உதவி செய்வதே சபையின் முக்கிய நோக்கம். சேரிகளிலும், மருத்துவமனைகளிலும் கன்னியர்கள் உழைத்தனர். முதல் ஆண்டிலேயே 760 பாவிகளை மனந்திருப்பினர். ஏழைக் குழந்தைகளுக்கு கல்வி கற்பித்தனர். முதியோர் இல்லம் அமைத்தனர். கைவிடப்பட்டவர்களுக்கு இல்லங்களை ஏற்படுத்தினார்கள். ஒவ்வொரு நாளும் 300 ஏழைகளுக்கு உணவு கொடுத்தனர். ஏறக்குறை 900 பெண்களுக்கு உறைவிடம் அளித்தனர். 1400 பேர்கள் இவர்களை நம்பி வாழ்ந்தனர். சிலர் போலந்து நாட்டுக்கு சென்று, போரில் காயமடைந்த வீரர்களுக்கு சேவை செய்தனர்.

**சிந்தனை:**

ஏழைகளுக்கு விடாமுயற்சியுடன் சேவை செய்து வா. இயேசுவை நீங்கள் மதித்து நேசிப்பதைப் போல் ஏழைகளையும் நீங்கள் மதித்து நேசியுங்கள்.

(புனித லூயிஸ் மரிலாக்)

**செபம்:**

ஆண்டவரே, ஏழைகளிடமாய் நாங்கள் உம்மைக் காணும் வரம் தாரும்.



(C) 2012 John Sheppard - Distributed by Catholic Online - www.catholic.org